21

தமிழ்நாடு அரசு

சுருக்கம்

---

தமிழ் வளர்ச்சி–நூல்கள் நாட்டுடைமையாக்கல்–எழுத்தாளர் புதுமைப்பித்தன் அவர்களின் நூல்களை நாட்டுடைமையாக்குதல் – மரபுரிமையர்களுக்கு பரிவுத் தொகை வழங்குதல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

- - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - -

தமிழ் வளர்ச்சி–பண்பாடு மற்றும் அறநிலையத் (தவ1.1)துறை

அரசாணை (நிலை) எண். 98 நாள்: 17.06.2002

படிக்க:–

தமிழ் வளர்ச்சி இயக்குநர் கடித ந.க.எண்.2408/தமிழ்1.1/2002
நாள்: 22.3.2002

....

ஆணை:–

10.4.2002 அன்று தமிழ்நாடு சட்டமன்றத்தில், 2002–2003ம் ஆண்டுக்கான தமிழ் வளர்ச்சி–பண்பாட்டுத் துறை மானியக் கோரிக்கையின்போது,

"சிறு கதைகளுக்கு புத்துயிர் ஊட்டி, தமிழகத்திற்கு பெருமை சேர்த்த எழுத்தாளர் புதுமைப்பித்தன் நூல்கள் நாட்டுடைமையாக்கப்படும்"

என மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்களால் அறிவிப்பு வெளியிடப்பட்டது. 1.4.2002 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில் இதற்கென ரூ. 5.00 இலட்சம் செலவாகும் என முடிவு செய்யப்பட்டது.

2. எழுத்தாளர் புதுமைப்பித்தன் அவர்களின் படைப்புகளை நாட்டுடைமையாக்குவது தொடர்பில் தமிழ் வளர்ச்சி இயக்குநர் அறிக்கை கேட்கப்பட்டதில், தமிழ் சிறுகதைகளின் முன்னோடி என்றும், மேதை என்றும் அனைவராலும் பாராட்டப்பெறும் மறைந்த புதுமைப்பித்தன் அவர்களின் படைப்புகளை நாட்டுடைமையாக்கம் செய்ய வேண்டி தமிழறிஞர்கள், எழுத்தாளர்கள், பத்திரிக்கையாளர்கள் போன்றோரின் பரிந்துரைகளுடன் கடிதங்கள் வரப்பெற்றுள்ளன என்றும், அன்னார் 25.4.1906 அன்று திருப்பாதிரிப்புலியூரில் பிறந்தார் என்றும், அவரது சொந்த ஊர் திருநெல்வேலி வண்ணார்பேட்டை என்றும், இயற்பெயர் சொ.விருத்தாசலம் என்றும், இவரின் தந்தை சொக்கலிங்கம் பிள்ளை மற்றும் தாயார் பர்வதம் அம்மாள் என்றும், இளங்கலை பயின்று தினமணி நாளிதழில் துணை ஆசிரியர் பொறுப்பில் இருந்தவர் என்றும், தமிழ் வளர்ச்சி இயக்குநர் தெரிவித்துள்ளார். மேலும், அன்னார் தமிழ் சிறுகதை உலகில் சிறப்பாகத் திகழ்ந்தவர் என்றும், தமிழ் சிறுகதையின் தாய், சிறுகதை மேதை என்று போற்றப்பட்டவர் என்றும், கவிதை எழுதுவதிலும் சிறந்து விளங்கியவர் என்றும், பழமையும், புதுமையும் மிளிர இந்நாட்டு மரபுகள் மேலை நாட்டு மரபுகள் மிளிர கதைகள் தந்தவர் என்றும், அன்னார் தனது படைப்புகளில் பேச்சுத் தமிழை பயன்படுத்திக்காட்டியவர் என்றும், உலகத்துச் சிறந்த சிறுகதைகளை மொழிபெயர்த்து அளித்தவர் என்றும், புராணத்தையும், புதுமையும் இணைத்து அருமையான கதை படைப்புகளை அளித்துள்ளவர் என்றும், திரைப்படங்களுக்கு வசனம் எழுதியுள்ளார் என்றும், 'நினைவுப் பாதை'; 'கடவுளும் கந்தசாமிபிள்ளையும்', 'சிற்பியின் நரகம்', 'பொன்னகரம்', 'அகலிகை',

'கோபாலபுரம்', 'ருக்மணி', முதலிய இவருடைய கதைகள் காலத்தை வென்று நிற்கும் சிறுகதைகள் என்றும், அவரது படைப்புகள் அனைவரையும் சென்றடையும் பொருட்டு அவற்றை நாட்டுடைமையாக்கம் செய்து அதன் தொடர்பில் அவரின் மரபுரிமையர்க்கு பரிவுத் தொகை வழங்கலாம் என்றும், தமிழ் வளர்ச்சி இயக்குநர் அரசுக்குப் பரிந்துரை செய்துள்ளார்.

3. தமிழ் வளர்ச்சி இயக்குநரின் பரிந்துரையை அரசு கவனமாக ஆய்வு செய்து மறைந்த எழுத்தாளர் புதுமைப்பித்தன் அவர்களின் நூல்களை நாட்டுடைமையாக்கி அதன் தொடர்பில் பரிவுத் தொகை வழங்க ரூ. 5.00 இலட்சம் (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) ஒப்பளிப்புச் செய்து அவரது மரபுரிமையர்க்கு வழங்க அரசு ஆணையிடுகிறது.

4. மேலே பத்தி 3-இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

"2202 பொதுக்கல்வி-05, மொழி வளர்ச்சி-800. ஏனைய செலவு-மாநிலத் திட்டம்-JE. தமிழ் வளர்ச்சிக்கான மானியங்கள், பரிசுகள் முதலியவை-தமிழ் வளர்ச்சி இயக்குநரின் பொறுப்பிலுள்ளவை-09. உதவி மானியங்கள்-03 குறிப்பிட்ட திட்டங்களுக்கான மானியங்கள்"
(த.தொ.கு. 2202 05 800 JE 0933)

5. மேலே பத்தி 3-இல் ஒப்பளிப்புச் செய்யப்பட்ட தொகையைப் பெற்று அவரது மரபுரிமையர்க்கு காசோலையாக வழங்குமாறும், அதன் விவரத்தை அரசுக்குத் தெரிவிக்குமாறும் தமிழ் வளர்ச்சி இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

6. தமிழ் வளர்ச்சி இயக்குநரால் சரிக்கட்டப்பட வேண்டிய பட்டியல்கள் எவையேனும் நிலுவையில் இருப்பினும், அதனை பொருட்படுத்தாமல் இச்செலவினம் தொடர்பாக தமிழ் வளர்ச்சி இயக்குநரால் சமர்ப்பிக்கப்படும் பட்டியலை உடனே அனுமதிக்குமாறு சம்பளக் கணக்கு அலுவலர், (வடக்கு), சென்னை-600 001 கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

7. இவ்வாணை நிதித் துறையின் அலுவல் சார்பற்ற எண்.131/து.செ(நி.ரு)/2002 நாள்: 14.06.2002-இல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பு.ஏ.இராமையா
அரசு செயலாளர்

பெறுநர்:-

தமிழ் வளர்ச்சி இயக்குநர், சென்னை-108
மரபுரிமையாளர்கள் (தமிழ் வளர்ச்சி இயக்குநர் மூலமாக)
சம்பளக் கணக்கு அலுவலர் (வடக்கு) சென்னை-1
மாநிலக் கணக்காய்வுத் தலைவர், சென்னை-18/சென்னை-35

நகல்:-

முதலமைச்சர் அலுவலகம், சென்னை-9
முதலமைச்சர் செயலகம், சென்னை-9
கல்வியமைச்சர் அலுவலகம், சென்னை-9
செயலாளர், நிதித்துறை, சென்னை-9
செயலாளர், தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத்துறை, சென்னை-9
நிதித்துறை, சென்னை-9
செய்தி மற்றும் சுற்றுலாத்துறை, சென்னை-9
இகோ/உதிரி

ஆணைப்படி/அனுப்பலாகிறது

பிரிவு அலுவலர்
18/6/02